# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, KRISHNAGIRI

**Mcop.No. 949 /2018 (Joint Trial with 933/2018)**

Deposition of PW2 Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade-I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1969.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.வெங்கடேஷ் | Father's Name | : | திரு.போடியப்பா |
| Village | : | | Taluk | : | |
| calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் எனது முதல் விசாரணை குறித்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . அதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

| | | |
|---|---|---|
| முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் | **ம.த.சா.ஆ.7** |
| பிரேதபரிசோதனை அறிக்கை | ஜெராக்ஸ் நகல் | **ம.த.சா.ஆ.8** |
| A.P.03/X.6901 -ஆட்டோ வாகனத்தின் காப்பீட்டு சான்று | ஜெராக்ஸ் நகல் | **ம.த.சா.ஆ.9** |
| A.P.03/X.6901 -ஆட்டோ வாகனத்தின் பதிவுச் சான்று | ஜெராக்ஸ் நகல் | **ம.த.சா.ஆ.10** |
| 1-ம் மனுதாரரின் ஆதார் அட்டை | உண்மை நகல் | **ம.த.சா.ஆ.11** |
| 2-ம் மனுதாரரின் ஆதார் அட்டை | உண்மை நகல் | **ம.த.சா.ஆ.12** |
| 3 ம் மனுதாரரின் ஆதார் அட்டை | உண்மை நகல் | **ம.த.சா.ஆ.13** |
| வாரிசுரிமைச் சான்று | ஜெராக்ஸ் நகல் | **ம.த.சா.ஆ.14** |

**3 வது எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்தில் இறந்த துர்கா என்னுடைய மகள் ஆவார் . கஸ்தூரி என்னுடைய மனைவி ஆவார். சந்தரகலா 3 வது மனுதாரர் என்னுடைய மற்றொரு மகள் அவருக்கு திருமணமாகவில்லை. என்னுடைய மகள் துர்கா B.Com படித்து முடித்திருந்தார், இரண்டு மகள்களையும் நான் தான் படிக்க வைத்தேன். அப்போது நிலம் இருந்தது அதில் விவசாயம் செய்து வந்தேன் . என்னுடைய மனைவி மற்றும் மகள் ஆகியோர் வேலைக்கு போய் அதன்மூலம் நான் ஜிவனம் செய்து வருகிறேன் . என் மகள் மற்றும், 5 பேர் ஆட்டோவில் குப்பம் மள்ளனூர் சாலையில் ராகிமானுமிட்டா கிராஸ் , வனகுட்டப்பள்ளி அருகே பயணம் செய்து கொண்டு இருந்ததுபோது ஆட்டோ ஓட்டுநர் நிலை தடுமாறி சாலை ஓரம் இருந்த தையல மரத்தின்மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். சந்தரகலாவுக்கு வழக்கு தாக்கல் செய்தபோது 27 வயது என்று சொல்லும் போது தற்போது சந்தரகலாவுக்கு 45 வயதாகிறது என்றால் அது சரியல்ல . சந்தரகலாவுக்கு திருமணம் செய்துவிட்டேன் என்றால் அது சரியல்ல. அதிக நஷ்டயீடு வாங்க வேண்டும் என்பதற்கு உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

என்னுடைய மகள் துர்கா மற்றும் சுதா ஆகியோர் ஆட்டோவில் சீட்டில் உட்கார்ந்து பயணம் செய்யவில்லை என்றும், Footpath ல் பயணம் செய்த நபர்கள் என்பதால் அனுமதிக்கப்படாத பயணிகளாக பயணம் செய்துள்ளார் என்றும், ஆட்டோ உரிமையாளர் அதன் ஓட்டுநர் ரகு என்பவர் அதிக ஆட்களை ஆட்டோவில் ஏற்றி வந்ததால் வண்டியை கட்டுப்படுத்த

முடியாமல் தலைகுப்புற விழுந்து ரோட்டின் ஓரம் இருந்த நீலகிரி தையல மரத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்று சொன்னால் 5 பேர்களை ஏற்றி வந்து வேகத்தை கட்டுப்படுத்தமால் ஆட்டோ குப்புற விழுந்து இந்த விபத்து ஏற்பட்டது . என் மகள் மற்றும் மற்ற நபர்களும் அனுமதிக்கப்பட்ட நபர்களைவிட அதிகமான நபர்கள் அந்த ஆட்டோவில் பயணம் செய்ததால் அவர்களை பொறுத்தவரையில் மூன்றாம் தரப்பினர்களாக கருதமுடியாது என்றால் அது சரியல்ல.

அந்த விபத்து ஏற்படுத்தி ஆட்டோ ஓட்டுநருக்கு லைசன்ஸ் இல்லை என்றும் பர்மிட் இல்லை என்றும் , வண்டிக்கு FC இல்லை என்றும், ஆகையால் இவை அனைத்து மோட்டார் வாகன விதிகளுக்கு முரண்பட்டது என்று சொன்னால் வண்டிக்கு Documents இருப்பது பற்றி எனக்கு ஏதும் தெரியாது. 1ம் எதிர் மனுதாரர் மோட்டார் வாகன சட்டத்தை மீறியுள்ளார், Policy விதிமுறைகளும் மீறியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு எந்த நஷ்டயீடு கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றால் அது தவறு. 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றால் அது தவறு . என்னுடைய மகள் உண்மையான வயது மற்றும் தொழில் , வருமானம் குறித்து உரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகள் Private School–ல் Teacher –ஆக பணிபுரிந்தார் அதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். பல்வேறு தரப்பின் கீழ் நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை அதிகப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றும், அதற்கான ஆவணங்கள் தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால் அது தவறு . என்னுடைய கோரிக்கை நிராகரிக்கப்படவேண்டும் என்றால் அது தவறு. இந்த மனு 3 ம் எதிர்மனுதாரர் பொறுத்தவரையில் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் அது தவறு.

<u>**மறுவிசாரணை :இல்லை**</u>

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:50:47 +0530